Y.M.C.A

# காங்கேசன்துறையில் இருந்து இராணுவம் வாபஸ்?
# உணவுக் கப்பல்களை அங்கே அனுப்ப ஆலோசனை

காங்கேசன்துறையில் இருந்து இராணுவத்தினர் வாபஸ் பெற முயல்வதாக நம்பகமாகத் தெரியவருகிறது. பலாலி முகாமைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரிகள் பலர் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறுவதற்கு விண்ணப்பித்ததைத் தொடர்ந்தேஇம்முடிவு மேற்கொள்ளப்படுகிறதாம்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக கப்பல்களில் வரும் உணவுப் பொருள்களை இழுவைப்படகு மூலம் பருத்தித்துறைக் கரைக்குக் கொண்டு வருவதில் சிரமமும் தாமதமும் ஏற்பட்டுள்ளதால் உணவுக் கப்பல் சேவையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆலோசிக்கப்படுகிறது.

இந்நிலையில் காங்கேசன் துறை துறைமுகத்தைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் இராணுவத்தினர் வாபஸ் பெறுவது இதற்கு வகை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 20 பிரமோதூத மார்கழி 02 (17-12-1990) திங்கள்

## அதிகாரிகளின் கவலையீனத்தால் கிளிநொச்சி விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி கமநலச்சேவை நிலையத்தில் இருந்த விவசாயிகளின் அடையாள அட்டைகள், முக்கிய ஆவணங்கள் என்பன இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் ஊழியர்களின் கவலையீனத்தால் பாவிக்க முடியாது சேதமாகியுள்ளன. விமானத் தாக்குதல்களால் இந்த அலுவலகம் முற்றாகச் சேதமடைந்தன. ஆனால் இராணுவம் கிளிநொச்சியில் இருந்து விலகி பல மாதங்களாகியும் இவற்றை அப்புறப்படுத்தாமல் இந்த ஊழியர்களும், அதிகாரிகளும் இருந்துவிட்டதாலேயே இவை சிதைவடைந்துள்ளன இவர்கள் இவற்றை உடனடியாக அப்புறப்படுத்தாததால் அவை மழையில் நனைந்து பாவனைக்கு உதவாத நிலைக்கு வந்துள்ளன. இதனால் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் மானிய முறைப்படி உரம், உபகரணங்கள், விதைகள் என்பவற்றைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (35)

★ வளைகுடாப் போரால் 1 லட்சம்! ★ ஈழப்போரால் 3 லட்சம்!

# வேலையற்றோர் தொகை 13 லட்சம்

# 70 சத விகிதம் இளைஞர்கள்

## கொள்கைத் திட்டமிடல் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க அறிவிப்பு

கடந்த ஏழு வருடங்களில் வேலையற்றோர் தொகை படிப்படியாக அதிகரித்து இன்று 1, 300, 000 ஆக உயர்ந்துள்ளது என்றும், அடுத்த வருடம் இது 1, 800, 000 ஆக உயரலாம் என்றும், கொள்கை, திட்டமிடல், சூழற் பாதுகாப்பு அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வளைகுடாப் போரினால் 1லட்சம் பேர் வேலை இழந்துவிட்டார்கள் என்றும், வட-கிழக்குப் போரினால் வேலையற்றோர் தொகை 3 லட்சத்தால் அதிகரிக்கும் என்றும் அமைச்சர்மேலும்சொன்னார்.

வேலையற்றோரில் 70 சத விகிதமானோர் இளைஞர்கள் என்றும், வருடா வருடம் வேலையற்றோர் தொகை 22 சத விகிதத்தால் அதிகரிக்கிறது என்றும் அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, வேலையற்றோர் எல்லோரையும் அரச, கூட்டுத்தாபன, தனியார் துறைகளில் சேர்த்துக் கொள்வது சாத்தியமில்லை என்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

## சிங்கள மினிபஸ் சாரதிகளை வவுனியா ராணுவம் தாக்கியது

கொழும்பிலிருந்து மதவாச்சி வரும் வடபகுதி பயணிகளை வவுனியாவிற்கு மினிபஸ்களில் ஏற்றி வந்த பல சிங்கள மினிபஸ் சாரதிகளும், நடத்துனர்களும் வவுனியாவில் வைத்து இராணுவத்தால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இவர்கள் வடபகுதி பயணிகளிடமிருந்து மதவாச்சி-வவு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வளலாய், அச்சுவேலிப் பகுதிகளில்

## 'ஷெல்' தாக்குதலினால் இருவர் படுகாயம் அடைந்தனர்

நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரை பலாலி முகா

பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான 'ஷெல்' தாக்குதல்

கிழக்கிலும் விழுந்து வெடித்த 'ஷெல்' ...

## அம்பாறை காரைதீவுப் பகுதியில்

## 22-ம் திகதி மாங்குளம் வெற்றி நாள்

எதிர் வரும் 22-ம் திகதி சனியன்று கரும் புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு நாளாகவும், மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப் படுத்தியுள்ளனர். (71)

## வடமராட்சி கோட்ட அதிபர்களுக்கு அழைப்பு

தென் தமிழீழ மக்களின் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும், இன்றைய பாடசாலைகளின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வங்கி முகாமையாளர் கருத்தரங்கு

நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரை பலாலி முகாமிலிருந்து வளலாய், அச்சுவேலி, பத்தைமேனி, அச்சுநகர், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வளலாய்ப் பிள்ளையார் கோவிலடியிலும், வளலாய் கிழக்கிலும் விழுந்து வெடித்த 'ஷெல்' களினால் வேலி அடைத்துக் கொண்டிருந்த திரு. வே. செல்வநாயகம்,

—04 ஆம் பக்கம் பார்க்க

## வேலணையில் குண்டுவீச்சு
## தாய், மகள் உட்பட மூவர் பலி

வேலணை வங்களாவடியில் நேற்றுக் காலை இரண்டு சியா மாசெற்றி குண்டு வீச்சு விமானங்கள் கண்மூடித்தனமாக குடிமனைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று முன்தினம் வங்களாவடி, செருக்கன் சந்திப்பகுதிகள் குண்டு வீச்சுக்கு இலக்கானதும் அதில் அரசினர் ஆஸ்பத்திரியும், சரஸ்வதிவித்தியாசாலையும் பாதிப்புக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது.

நிவாரணப் பொருள்களை பெறுவதற்காக கூட்டுறவுச் சங்கக்கிளையொன்றில் குழுமி நின்ற மக்களே இதனால் பாதிக்கப்பட்டனர்.

தேவராஜா பிருந்தா என்ற 13 வயதுச்சிறுமி ஸ்தலத்திலேயே பலியானார் படுகாயமடைந்த இச்சிறுமியின் தாய் தேவராஜா தனலட்சுமியும் (40), காண்டீபன் (13) கட்டுடை ஆகியோர் யாழ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

கொழும்பில்

## ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

கொழும்பில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தினுள் தமிழ்த் தீவிரவாதக குழுவொன்றின் உறுப்பினர்கள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஈ.பி.டி பி. உறுப்பினர்களுக்கும் இந்தத் தீவிரவாதக்குழு உறுபபினர்களுக்கும் இடையில் துப்பாக்கிச்சண்டை நடந்தது எனவும் அவர் சொன்னார்.

சேதவிபரங்கள். எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (33)

அம்பாறை காரைதீவுப் பகுதியில்

## 41 பேர் அதிரடிப்படையால் கைது மூவர் அதேயிடத்தில் கொலை

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவு பகுதியைச் சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையினர் 41 பேரைக் கைது செய்தனர். இதில் மூவர் அதேயிடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்

கடந்த செவ்வாயன்று காலை 7 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மிகுதி 38 பேரையும் காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர். (71)

## தோப்பூரில் 2 தமிழர் படையினரால் வெட்டிக்கொலை

திருமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூரில் இரு தமிழ்ப் பொதுமக்களை இராணுவத்தினர் வெட்டிக்கொன்றுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று நடந்த இக்கொலைக் சம்ப

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையிலிருந்து ஷெல் வீச்சு; சிறுமி பலி

நேற்றுப் பகல் விமானத் தாக்குதல்களையடுத்து ஊர்காவற்றுறைமுகாமில்இருந்து குடியிருப்புகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

புளியங்கூடலில் ஒரு வீட்டு முற்றத்தில் விழுந்து ஷெல் வெடித்ததால் இராசையா

—04 ஆம் பக்கம் பார்க்க

## முகாமையாளர் கருத்தரங்கு

யாழ் மாவட்ட வங்கி முகாமையாளர்க்கான கருத்தரங்கு இன்று திங்கள் மாலை 3 மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் சகல

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆரியகுளத்திலிருந்து மினிபஸ் சேவை

நேற்று முதல் ஆரியகுளத்திலிருந்து பருத்தித்துறை. மாதகல் பகுதிகளுக்கான மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவை கடந்த ஜூன் மாதம் முதல் முத்திரைச் சந்தியில் இருந்து நடைபெற்றுவந்தது. (ப-11,70)

வாழைச்சேனை கட்டைபறிச்சான்

## 8 பொதுமக்கள் ரெலோவினால் இராணுவத்திடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பேத்தாலை, வாழைச்சேனைப்பகுதிகளைச் சுற்றிவளைத்த ரெலோ இயக்கத்தினர் 5 பொதுமக்களைக் கைதுசெய்து வாழைச்சேனை இராணுவ முகாமில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று காலை 6 மணியளவில் ஆரம்பித்த இச்சுற்றிவளைப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி கடலில் மீனவர் கைது படையினரால் மீன்களும் அபகரிப்பு

பாலைதீவு கடற்பகுதிக்கு வந்த கடற்படையினர் 12 மீன் பிடி வள்ளங்களைப் பிடித்து அவற்றில் இருந்த மீன்கள் அனைத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளி யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து சென்ற மீனவர்களை பாலைதீவு கடற்பகுதியில் அதிகாலை 2 மணியளவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த கடற்படையினர் மீனவர்களை மிரட்டியதோடு பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் பூநகரி, கல்முனைப் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று மீனவர்களுக்கும், அவர்களது வள்ளங்களுக்கும் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தெரியவில்லை. (66,74,33)

### ரஞ்சன் ஒப்புக்கொள்கிறார்

## புலிகளிடம் இராணுவம் தோல்வியடைந்து வருகிறது

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இராணுவத்தினர் தோல்விகளைச் சந்திக்கின்றனர் என்பதனைப் பாதுகாப்புத்துறை ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பாராளுமன்றத்தில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இராணுவத் தோல்வி பற்றிப் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்திக் கேள்விக்கணை தொடுத்த போது 'புலிகளுடனான எமது யுத்தத்தில் இராணுவத்திற்கு தோல்வி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களிலே மாத்திரம் எதிர்க்கட்சித் தலைவி அறிக்கை விடுக்கின்றார்' என்று ரஞ்சன் விஜேரத்ன கூறினார்.

### வடமராட்சி கிழக்கில்

## அதிவிசைப் படகுகள் ரோந்து தீவிரமாகிறது

நீண்ட நாட்களுக்குப் பின் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் கடற்படையின் அதிவிசைப் படகுகள் வடமராட்சி கிழக்கில் கரைக்கு மிக அண்மையில் ரோந்தில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது

கடந்த இரண்டு நாட்களாக இரவுவேளையில் சீபிளேன் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பறந்துதிரிந்தது.

ஆனையிறவு முகாமில் இருந்து இரவு வேளையில் பரா வெளிச்சமும் அடிக்கப்படுகின்றது. (18)

### நிலைமை மோசமடைய

## வி. பி. சிங், கலைஞர், ஸ்ரீலங்கா இராணுவம் காரணம் -- இ. காங்.

வி. பி சிங் தலைமையிலான மத்திய அரசினதும், தலைவர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அரசினதும் மெத்தனப் போக்கே வடக்குக், கிழக்கில் என்றுமில்லாதவாறு நிலைமை மோசமடைந்திருப்பதற்கு எல்லாவற்றிலும் மேலான காரணம் என்று தமிழக இந்திரா காங்கிரஸ் சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டச் செயலர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் மூர்க்கத்தனப் போக்கும் இந்நிலைமைக்குக் காரணம் என்றும் தீர்மானம் மேலும் தெரிவித்தது.

## பூநகரி கொத்தணிஅதிபர் கோரிக்கை

பூநகரி கொத்தணியிலுள்ள சகல பாடசாலைகளும் இவ்வருட மாணவர் வகுப்பேற்றங்களைச் செய்வதற்காகவும், அடுத்த வருட ஆரம்ப வேலைகளை மேற்கொள்வதற்காகவும் எதிர்வரும் 20-ம், 21-ம் திகதிகளில் நடைபெறும் என்றும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறும் கொத்தணி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அகதிமுகாம்களில் உள்ளோருக்கு விவசாய உபகரணம் கிடைக்கும்

இடம் பெயர்ந்து வந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் முகாம்களில் தங்கியுள்ள அகதிக்குடும்பங்களுக்கு 1250 ரூபா பெறுமதியான மண்வெட்டி, கோடரி, வாளி, அரிவாள், வெட்டுக்கத்தி, அலவாங்கு ஆகிய விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

விவசாயம் மேற்கொள்வதற்கு உதவியாக ஏக்கர் ஒன்றுக்கு ஒரு அந்தர் கச்சான், 16 கிலோ பயறு, 20 கிலோ உழுந்து, 20 கிலோ சோளம், 20 கிலோ கௌபி, மரக்கறி விதைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

முகாம்களில் தங்கியுள்ள கடற்றொழில் குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செய்து வருகின்றது. (18)

### நாகர் கோவிலில்

## அகதிகள் குடிசைகள் தகராறால் தீக்கிரை

திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்து நாகர்கோவில் கிராமத்தில் தங்கியுள்ள அகதிக் குடும்பங்களுக்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவு, சர்வதேசச் சங்கத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட தற்காலிக வதிவிடக் குடிசைகளுக்குத் தீ மூட்டப்பட்டமையினால் ஒன்பது குடிசைகள் முற்றாகஎரிந்து சேதமாயின.

முகாமில் தங்கியுள்ளவர்களுக்கும் நாகர் கோவில் கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களில் ஒருபகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை தீ மூட்டப்பட்டதற்கு காரணம் என கூறப்படுகிறது

குடிசைகளில் தங்கியிருந்த குடும்பங்களின் அடையாள அட்டை உட்பட அனைத்துப் பொருட்களும் எரிந்து சாம்பராயின எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் காரணமாக மூவர் விசாரணைக்காக வடமராட்சி கிழக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (18)

### மாதிரி விவசாயப் பண்ணை

நல்லூர் பல நோ. கூ. சங்கத்தால் மாதிரி விவசாயப் பண்ணை ஒன்று அமைக்கப்படவுள்ளது

## தென் தமிழீழ உடன் பிறப்புகளுக்கு நாம் வலிந்து உதவவேண்டும்

'தென் தமிழீழத்தில் எமது உடன் பிறப்புக்கள் அடைந்துவரும் எல்லையில்லாத் தொல்லைகளில் பங்கேற்க வேண்டும். அவர்களுக்கு மனப்பூர்வமாக நாம் உதவி செய்யவேண்டும்.'

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. வரதன் 'தென் தமிழீழ மக்களுக்கு உதவுவோம்' என்ற நோக்கில் எட்டுச் சிற்றூரவைகள் இணைந்து நெல்லியடியில் நடத்திய கூட்டத்தில்பேசுகையில் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் 'தென்தமிழீழத்தில் மக்கள் அக்கிரமக்காரர்களால் பராரிக் கோலத்தில் விடப்பட்டுள்ளனர்.

அங்கே மாற்றுடையின்றி கிழிந்த உடைகளுடன் பட்டினியில் வாடுகிறார்கள். பெண்கள், இளம் பராயத்தினர்க்கு உரிய உதவிகள் கிடைப்பதில்லை, ஏழ்மையின் விளிம்பிலே நின்று நம் இனம் இன்று அங்கே தடுமாறுகிறது, தத்தளிக்கிறது.

எம் உடன் பிறப்புகள் துன்பத்தில் துவள்கையில் நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கலாமா? இயன்ற உதவிகளை மக்கள் அவர்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டும்.

இக்கட்டான வேளையில் வடஈழமக்கள் எமக்கு உதவினார்களே என்று அவர்கள் நன்றியுடன் நினைவு கூருவார்கள்.' என்றார்

திருவாளர்கள் தினேஷ், ஆஞ்சநேயர் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

''வடக்கு மக்களாகிய நாம் அவர்களுக்கு உதவி, அவர்கள் அடையும் மகிழ்வில் நாம் இருக்கிறோம் என்கின்ற திருப்தி எமக்கு ஏற்படுகிறது. நாம் உதவினோம் என்ற மனத்தெம்பு அவர்களுக்கு ஏற்படுகிறது'' என்றும் அவர் கூறினார்.

### திருமலையில் மூன்று

## சிப்பாய்கள் பலியாகினர் நால்வர்க்கு காயம்

திருகோணமலையில் நேற்று முன்தினம் நிலக்கண்ணியில் சிக்கி மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் மேலும் நான்கு சிப்பாய்கள் காயமுற்றதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் மூலம் தகவல் வெளியாகியுள்ளது என்றும் இச் செய்திகள் கூறின.

### பூந்தோட்டத்தில்

## யாழ் திரும்புபவர்க்கு கூடுதலான கெடுபிடி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்புபவர்களையே பூந்தோட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், தமிழ்க்குழுவின் ஆலோசனையால் பதுங்குகுழி வெட்ட நிர்ப்பந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரிபுரத் தடைமுகாமிலும் சோதனைகள் மிகக் கடுமையாக உள்ளதாகவும் கூறப்படுகிறது (23)

### வலி-வடக்கு அகதிகள் நிலை;

## அரச அதிபரைச் சந்தித்து விளக்கத் தீர்மானம்

வலி-வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு முகாம்களில் இருப்பவர்க்கு அளிக்கப்படுவது போல் வார உலர் உணவு வழங்க அரசாங்க அதிபரைக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் நலன்கருதிச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்றும் இங்கு தெரிவு செய்யப்பட்டது (16-ப- 33

## தனியாருக்கும் சம்பள உயர்வு

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வை தனியார் துறையினருக்கும் கிடைப்பதற்கு தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

லாதவாறு நிலைமை மோச மடைந்திருப்பதற்கு எல்லா வற்றிலும் மேலான காரணம் என்று தமிழக இந்திரா காங் கிரஸ் சட்டசபை, பாராளு

ஸ்ரீலங்கா இராணுவத்தின மூர்க்கத்தனப் போசகும் இந் நிலைமைக்குக் காரணம் என் றும் தீர்மானம் மேலும் தெரி வித்தது.

# கண்ணீர் அஞ்சலி

## உயர் திரு
## சண்முகம் ஞானப்பிரகாசம்

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும்,
உலர்வலய அபிவிருத்திமன்ற இணைப்பதிகாரியும்)

### வெண்பா

ஞானப்பிரகாசம் நானிலமே நீக்கியுன்றன்
மோனநிலை கூடி வந்தனனால்—மேனிலையைத்
தந்தருளு வித்தகனே தாவில்சீர் நல்லையினில்
சுந்தரனாய் நிற்பவனே சொல்

கூட்டுற வாணையராம் சிக்கனத்துக் காவலனாம்
நாட்டிலே வாழ்ஞானப் பிரகாசம்—தீட்டுதமிழ்
நல்லைத் தருநிழலை நாடினான் மலர்த்தேனை
எல்லையின்றி அள்ளி இறை

கொஞ்சி மகிழ்ந்தெடுக்கும் கோலத் திருமுகமும்
பிஞ்சு மலர்ப் பதமும் எப்போதும்—நெஞ்சில்
அகலாது நிற்கும் அடியர் இடர் தீர்க்கும்
அகலாத ஆணையரைக் கூட்டு.

கரணவாய் வேதாரணியேஸ்வரா ஐ. நா. ச.
உலர்வலய சேமிப்புக் கழகம்.

12110

## மாதிரி விவசாயப் பண்ணை

நல்லூர் பல நோ. கூ. சங்கத்தால் மாதிரி விவசா யப் பண்ணை ஒன்று அமைக் கப்படவுள்ளது

ஆரம்ப நடவடிக்கையாக திருநெல்வேலி, கோண்டா வில் பகுதியில் இரண்டு ஏக் கர் காணியில் உப உணவுப் பயிர்கள் தற்போது செய்கை பண்ணப்படுகிறது.

இந்நடவடிக்கை ஏனைய சங்க எல்லைக்குட்பட்ட பகு திகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு விரைவில் ஒரு விவசாயப் பண்ணை உருவாக்கும் என இச்சங்கத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தெரிவித் துள்ளார் (66)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்ல றையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரி களுக்கு விசேட கழி வுண்டு) 'மண் டேலா ரேடர்' இல 256 A, பருத் தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப் பாணம். 12109


வடமராட்சி கிழக்கு விடு தலைப் புலிகள் மக்கள் முன் னணி அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (18)

# பருத்தித்துறை இறங்குதுறையை திருத்தத் துரித நடவடிக்கை

பருத்தித்துறைஇறங்குதுறை சேதமானதையடுத்து, இத னைத் தற்காலிகமாகத் திருத் தும் பணியில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

நூற்றாண்டுகால பழமை வாய்ந்த இந்த இறங்குதுறை யில் கடந்த சில மாதங்க ளாகப் பொருட்கள் இறக்கப் பட்டதனால் இழுவைப்படகு களால் கடுமையாக உரசப் பட்டதுடன் சீரற்ற கால நிலையினாலும் அது சேத மடைந்தது,

எனினும் பொருட்களை இறக்குவதற்கு வசதியாகப் பருத்தித்துறை இறங்குதுறை யில் மண்மூடைகளை அடுக் கிப் பனைமரங்கள் மூலம் பாதுகாப்பு அரண்களைச் செஞ்சிலுவைச்சங்கம் கட்டி யுள்ளது. இதனைத் தொடர் ந்து பொருட்கள் இறக்கும் பணி துரிதமடைந்துள்ளது (50)

## நம்பிக்கை

'தமிழக அரசையோ, பாண் டிச்சேரி அரசையோ கவிழ்க்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்று பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. டி. ராமச் சந்திரன் கூறியுள்ளார்.

தான் சமீபத்தில் பிரதமர் உட்பட பலரையும் சந்தித்த போது இந்நிலைஉறுதியானது என்றுதெரிந்து சொண்டதாக வும் அவர் கூறினார்.

சுன்னாகம் இராமநாதன் கல் லூரியில் திரு. சி. சிவமகா ராசா தலைமையில் நடத்தப் பட்ட கூட்டத்திலேயே இத்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமபள உயர்வை தனியார்துறையின ருக்கும் கிடைப்பதற்கு தொழில் அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

சுமார் 25 லட்சம் தனி யார்துறை ஊழியர்கள் இத னால் நன்மையடைவார்கள்.

இதன்படி 2000 ரூபாவுக்கு குறைவான மாத வருமானம் பெறுவோருக்கு 300ரூபாவும், 2000 ரூபாவுக்கும் 3000 ரூபாவுக்கும் இடையில் மாத வருமானம் பெறுவோருக்கு 200 ரூபா கிடைக்கவும் ஏற் பாடுகள் செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக தொழில் ஆணையாளர் தமது அதி காரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.


## போட்டோஸ்ரற்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை

★ "ஸ்கைலைன்ஸ்" ★

281 B, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்,

★ 'SKYLINES' ★

281 B, Clock Tower Road, Jaffna.
(ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை)

12106

### இன்று வருகிறார் சீனப்பிரதமர் லீ பெங்

# சுக்ளா விஜயத்தை தாமதமாக்க ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்ட முயற்சி?

இலங்கை இனப்பிரச்சினை குறித்து விவாதிக்க வரவுள்ள இந்திய வெளியுறவு மந்திரி திரு. வி. ஸி. சுக்ளாவின் விஜயத்தைத் தாமதப்படுத்த இலங்கை அரசு தீவிரமாக முனைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாதம் 20-ம் திகதி முதல் 23-ம் திகதி வரை கொழும்பில் தங்கியிருந்து இனப்பிரச்சினை குறித்து திரு சுக்ளா பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் அவரது விஜயத்தை ஒத்திவைக்குமாறும் இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4-ம் திகதி அவரை இந்திய ஜனாதிபதியின் பிரதிநிதியாக அதாவது பிரதமவிருந்தினராக அவரைக் கொழும்புக்கு அனுப்புமாறும் இலங்கை யோசனை கூறியுள்ளதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

இதேவேளை, இலங்கை இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தை ஏஜென்ஸிச் செய்திகள் 'இது ஓர்' இரகஸியப் பயணம் என வர்ணித்துள்ளன.

அவர் அங்கு தங்கியிருக்கையில் அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார் என்றும் இச் செய்திகள் மேலும் கூறியுளளன.

எனவே இந்திய வெளியுறவு மந்திரியின் விஜயத்தைப் பின்போடச் செய்வதில் இலங்கை அரசு முனைந்துள்ள செயற்பாடானது ஆழமான உள்நோக்கு கொண்டது என்றும் பாகிஸ்தானினதும், சீனாவினதும் உதவிகளுடன் போராளிகளுக்கு எதிரான அரசு தமிழர் மீதான நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக முடுக்கி விடலாம் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சீனப் பிரதமர் திரு. லீபெங் இன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார் என்றும் இலங்கை அரசு அவரிடம் பெருமளவில் ஆயுத உதவியையும் கோரலாம் என்றும் கொழும்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சுட்டிக் காட்டப்படுகிறது.

சீனாவுடன் நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதில் திரு. நவாப்ஷெரீப்தலைமையிலான புதிய பாகிஸ்தான் அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளதும் இங்கு கோடிட்டுக் காட்டப்படுகிறது.

### உள்நாட்டுப்பிரச்சினைகள் தீர்ந்த பின்பே

# இலங்கைத் தமிழர் விடயம் குறித்து கரிசனை என்கிறார் இந்தியப்பிரதமர்

''ராமஜென்ம பூமி, பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அடுத்தபடியாக இலங்கைப் பிரச்சினை கவனிக்கப்படும்.''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழர்களுக்கு அமைதியான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனத்தான் பிரதமரைச் சந்தித்துக் கோரியபோது பிரதமர் மேற்கண்ட வாக்குறுதியை அளித்தார் என்று இந்திரா காங்கிரஸ் தமிழகத் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலை, போராளிகளின் நடமாட்டம் குறித்து விவாதிக்க சட்டசபையை உடனடியாகக் கூட்டுமாறு சட்ட சபையின் இந்திராகாங்கிரஸ் கொறடா திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பெற்ற பாசத்திற்கு கெரில்லா விதிவிலக்கல்ல

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் எனப்படுவதுண்டு. அதனால் மனிதரைப் போல் குரங்கும் தாயன்பு கொண்டதாக இருக்கிறது என்பதை நிரூபிக்கும் சான்று தென் லண்டனில் நிகழ்ந்துள்ளது. அங்குள்ள ஹெளவ்லட் மிருகக்காட்சிச்சாலையில் கெரில்லாக் குரங்குகள் 35குட்டிகளை இதுவரை ஈன்றுள்ளன. இதனால் காட்சிச்சாலை அதிகாரிகள் பெருமிதம் கொண்டுள்ளனர். ஏனெனில் காட்டு வாழ்க்கைக்குப் பழகிப்போன மிருகங்கள் செயற்கைச் சூழலில் சுலபமாகப் பிரசவிப்பதில்லை. அப்படியே பிரசவித்தாலும்

## சங்கத்தார்வயல் கிராமங்களிலும் குண்டுவீச்சு

ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளை பல முறை சுற்றி வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் கடந்த வெள்ளிக்கிழமை

# பலாலி தளமான கதை [6]

### மாலைக்குள் ஏதோ பொருள்!

1973 ஆம் ஆண்டில் ஒரு நாள் ... அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரத்தில் இருநதது. தபால் அமைச்சராகத் தமிழர் ஒருவர் 'நியமிக்கப்'பட்டார். ஒரு தமிழ் அமைச்சர் பலாலிக்கு வர ஏற்பாடாகியது. அரச அதிகாரிகள் ஒழுங்குகளை மேற்கொண்டனர். அலங்காரங்கள, சோடனைகள், வரவேற்கும் திட்டங்கள் தயாராகின. தமிழ் இளைஞர்கள் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை இழந்து 'மாற்றுவழி' தேட ஆரம்பித்த காலம அது அரசாங்கத்தையும்-அமைச்சர்களையும் வரவேற்பதை இளைஞர்கள் விரும்பவில்லை. நேரடித் தாக்குதல்கள் எதுவும் அப்போது வேகம் பெறவில்லை எனினும் அமைச்சருக்கு எதிர்ப்புக்காட்ட எண்ணினர். பாதுகாப்பு ஒழுங்கு பலப்படுத்தப்பட்டிருந்தது. வரவேற்புக்கு மாலைகள மட்டும் அணிய அனுமதி கிடைத்தது. வரிசையில் மக்கள் மாலைகளுடன் நின்றனர். அவை அமைச்சருக்கு அணிவிக்கபபட்டன. மாலை கழுத்தை மூடியது. முகத்தையும் மறைத்தது. முகத்துக்கு மேலாலும் மாலை போடப்பட்டது. அமைச்சர் அகமகிழ்ந்தார், ஆதரவாளரின் கரகோசம் வானைப் பிளந்தது இந்நிலை நீடிக்கவில்லை. திடீரென அமைச்சரின் கை கழுத்தை நோக்கி வேகமாக வந்தது. மாலைகள பிரித்தெறியப்பட்டன. அமைச்சர் நிலை குலைந்தார். அவரின் முகம் சலனமடைந்தது. அமைச்சரைச்சுற்றிப் பிய்த்தெறியப்பட்ட மாலைகள் அவரைப் பரிதாபமாகப் பார்ப்பது போன்று அசைவற்றுக் கிடந்தன. அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரும் மாலைக்குள் ஏதோ தேடினார். அங்கு எதையும் காணவில்லை. அமைச்சரின் கழுத்து-முகம் என்பன வீங்கித் தடித்தன. அவர் வைத்தியசாலைக்கு உடன் கொண்டு செல்லப்பட்டார். வைத்தியபரிசோதனை நடந்தது 'காஞ்சொண்டி இலை' மாலையில் பிணைத்துப் போடப்பட்டது தெரியவந்தது. அன்று அமைச்சரின் சகல நிகழ்ச்சிகளும் இரத்தாகின. இளைஞர்களின் எதிர்ப்புணர்வு இவ்வாறுதான் காட்டப்பட்டது. இதன் பின்பு பலாலி விமான நிலையத்தில் குறித்தொதுக்கப்பட்ட சிலரைத் தவிர மாலை போடுவது தடுக்கப்பட்டது.

### பலாலியில் வண்டிச்சவாரி

எனினும் விமானம் வந்திறங்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அங்கு மக்கள் சுதந்திரமாக நடமாடினர். செம்மறி ஆடுகள் மேய்க்கும் தரையாகப் பயன்பட்டது. ஓடு

**க. இராசதுரை**

பாதைகளில் வாகனங்கள ஓடப்பழக அனுமதிக்கப்பட்டது, கிழக்கு ஓடுபாதையில் வருடாந்தம் மாட்டுவண்டிச் சவாரிப போட்டி நடைபெறுவது வழக்கமாகியது. இதைக் காண மக்கள் அங்கு பெருமளவில் கூடுவர். அங்கு உள்ளூர் வேட்டைக்காரர்கள பறவை, முயல் என்பவற்றை வேட்டையாடினர். இந் நிலை நீண்டகாலம் நீடிக்கவில்லை.

### 'கறுப்புக்கொடி' எதிர்ப்பு

விமானத்தில் வந்திறங்கும் அரசியற் தலை

குண்டு வைத்துத் தகர்க்கப்படுகிறது. அரசு எதிர்பார்க்காத அதிர்ச்சி தமிழ்த்தீவிரவாதிகளுக்கு அரசு பயப்படுகின்றது. அன்றில் இருந்து சிவில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பலாலி விமான நிலையத்துக்கு மக்கள் செல்வது தடுக்கப்படுகின்றது. தாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள் 1982 அளவில் தகர்க்கப்படுகின்றன. வீதிகளில் ரோந்து செல்ல பொலிஸார் மறுக்கின்றனர். இராணுவத்துடனேயே பொலிஸார் ரோந்துக் கடமைக்குச் சென்றனர். சட்டமும் ஒழுங்கும் சீர்குலைகிறது பொலிஸாரின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

### இராணுவ ரோந்து

பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பொலிஸாரின் கடமைகள் மெல்ல மெல்ல இராணுவத்துக்கு மாற்றப்பட்டது. இராணுவம் வீதிகளில் ரோந்து புரிந்தது. விடுதலைக்காக போராடும் இளைஞர்கள 'பயங்கரவாதி'களாகப்பட்டம் சூட்டப்படுகின்றனர் போராளிகளைத் 'தேடியழிக்கும்' நடவடிக்கைகள் தொடர்கின்றன. அப்போது .....

### முதற் கண்ணி வெடி

1983 ஜூலை 23 ஆம் நாள் திருநெல்வேலியில் இராணுவ 'ட்றக்' ரோந்து வருகின்றது. வீதிதோறும் இராணுவம் 'அடாவடித்தனம்' தொடர்ந்து...... அதன் வேறு ஒரு பிரிவுவாகனங்கள் வருகின்றன. தாக்குதலுக்கு 'விடுதலைப்புலிகள்' தயாரானார்கள 'கெரில்லாத்தாக்குதலின்' ஆரம்பக் காலங்கள்.

திருநெல்வேலி மட்டுமல்ல யாழ் குடாநாட்டை அதிரவைத்த குண்டு வெடிக்கின்றது 'கண்ணிவெடி'யில் சிக்கிய'ட்றக்' வாகனமொன்று உயரஎழும்பி-சிதறி விழுகின்றது. துப்பாக்கி வேட்டுககளும் தொடர்கின்றது பதின்மூன்று இராணுவத்தின் உடல்கள் சிதறுகின்றன. இச் சம்பவத்துடன் இராணுவத்தின்-பொதுமக்களின் முரண்பாடு வலுக்கின்றது.

இச்சம்பவத்துடன் கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கின்றது. அகதிகளாகத் தமிழர் தமது தாய் நாட்டை நோக்கி கப்பல்களிலும் வரத்தொடங்கினர்.

1977 ஆகஸ்ட் 17-ம் திகதி இலங்கையில் இடம்பெற்ற அந்தக் கொடிய மூன்றாவது பெரிய இனக்கலவரத்தின் வேதனைகள்-வடுக்கள் சிங்கள இராணுவத்தைப் பழிவாங்கச் செய்தன. அதன் தொடரே 1983 ஆம் ஆண்டுத்தாக்குதல்களாகின. விடுதலை பெறத் துடிக்கும் அடக்கு முறை முட்டையை பலாத்காரமாக உடைத்து வெளியேற்றத் துடிக்கும் குஞ்சுகளாக போராளிகள் பரிணமித்தனர்.

### பலாலி படையினர் முகாம்

பலாலியில் இராணுவம் குவிக்கப்பட்டது. விமான நிலையம் விமானத்தளமாக்கப்பட்டது பயணிகள் வந்திறங்கிய பலாலி படையினரின் முகாமாகியது போராளிகள் தாக்குதல்களை எதிர்கொளள முடியாத இராணுவம் காலப்போக்கில் முகாமுக்குள் முடங்கியது. முகாம் போராளிகளால் சுற்றிவளைக்கபபட்டது தரைத் தாக்குதலுக்கு விமானப் படை பயந்தது வானத் தாக்குதலை மாத்திரம் மேற்கொண்டனர். வானத்தில் இருந்து 'கொடிய' கொடூர குண்டுகளின் உதவியால் வடமராட்சியை இராணுவம் அழித்தது.

பழகிப்போன மிருகங்கள் செயற்கைச் சூழலில் சுலப மாகப் பிரசவிப்பதில்லை. அப்படியே பிரசவித்தாலும் கூட தாய் விலங்குகள் குட்டிகளைக் கொன்றுவிடுவ துண்டு. ஆனால் சமீபத்தில் 15 கிலோ எடையுள்ள குட்டியொன்றை ஈன்ற பெண் கெரில்லா, குட்டியை அன்போடு அரவணைத்து வளர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

# உப- அஞ்சலகங்கள் மூலம் உதவிப் பணம் கிடைக்கும்

கடந்த ஐந்து மாதங்களாக வழங்கப் படாமலிருக்கும் பொதுசனமாதாந்த உதவிப் பணத்தை அஞ்சல் அலுவல கங்கள், உப- அஞ்சல் அலு வலகங்கள் மூலம் வழங்கு வதற்குரிய நடவடிக்கைகளை அஞ்சல் சேவைகள் மாகாண அததியட்சகர் (வடக்கு) திரு. எஸ்.எம்,சேதுகாவலர் யாழ்ப் பாண அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு ஒழுங்கு செய்துள்ளார்.

பொதுசன மாதாந்த உத விப் பணத்துக்குரிய வவுச் சரும். அதற்குரிய பணமும் உதவி அரசாங்க அதிபர் களால் உப- அஞ்சலதிபர்களி டம் கொடுக்கபபடும்.

கொடுப்பனவு முடிந்ததும் மீதிப்பணத்தையும், வவுச் சரையும் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டுமெனவும் இந்த நடைமுறையை மறு அறிவித்தல் வரை கடைப் பிடிக்கவேண்டுமெனவும் மாகாண அத்தியட்சகர் அகில இலங்கைத் தமிழ்பேசும் உப- தபாலதிபர்கள் தொழிற் சங் கப் பொருளாளருக்கு அனுப் பிய கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார்.

பொதுசன மாதாந்த உத விப்பணம் கொடுப்பனவு சம் பந்தமாக மேற்படி தொழிற் சங்கத்தினர் யாழ்ப்பாண அர சாங்க அதிபர், உதவி ஆணை யாளர்சமூகசேவைகள் திணைக் களம், மாகாண அத்தியட் சகர் அஞ்சல் திணைக்களம் ஆகியோருடன் தொடர்பு கொண்டமை குறிப்பிடத்தக் கது. (18)

முறை சுற்றி வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் இயக்கச்சிக்குச் சமீபமாக சங்கத்தார் வயல் கிராமப் பகுதியில் ஐந்து குண்டுகளை வீசின.

குண்டுகள் அனைத்தும் குடிமனை நெருக்கமற்ற பகுதிகளில் விழுந்தமையால் தெய்வாதீனமாக உயிர்ச் சேதமோ பொருட்சேதமோ ஏற்படவில்லை (18)

## மயிலிட்டி கடற்றொழிலாளர் சேதவிபர சேகரிப்பு

மயிலிட்டி கடற்றொழிலா ளர் சேதவிபரம் பற்றிய தக வல்களை இதுவரை தெரி விக்காதோர் நாளை செவ் வாய்க்கிழமை முற்பகல் பத்து மணியளவில் உடுவிலில் உள்ள சக்தி அகதி முகாமில் மயி லிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புத் தலைவர் திரு. செ. தனபாலசிங் கத்தைச் சந்திக்குமாறு தெரி விக்கப்படுகிறது.

மயிலிட்டிப்பகுதியில் 2 ஆயி ரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் அகதிகளாக உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (16)

## 'கறுப்புக்கொடி' எதிர்ப்பு

விமானத்தில் வந்திறங்கும் அரசியற் தலை வர்கள், ஆட்சியாளருக்கு எதிர்பபுக் காட்டப் பட்டது. கறுப்புக்கொடி பிடிக்கப்பட்டது. முன்னைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டது. இதன்பின்பு படிப்படியாக விமான நிலையத்தின் வரவேற்புப்பகுதியில் மக்கள் கூடுவதற்கு அனுமதி மறுக்கபபட்டது. வீதி களில் நின்று மக்கள் எதிர்ப்பைக் காட்ட முனைந்தனர்.

## பலாலி முகாம் பலப்படுத்தப்படுகிறது

1977ஆம் ஆண்டளவில் வடபகுதியில் தீவிரவாதச செயல்கள் வளரத் தொடங்கின. சாதவீகப் போராட்டத்தில் இளைஞர்கள், நம்பிக்கை இழந்தனர் தீவிரத்தலைமைகள் உருவாகின. பொலிஸ் நிலையங்கள் தாக்கப் பட்டன. பொலிஸ் நிலையங்களுக்கு இராணு வப் பாதுகாப்புக் கோரப்படுகின்றது கள ளக் கடத்தலை முறியடிக்கவந்த இராணுவம் சத்தியாக்கிரகிகளை தாக்கிய ராணுவம்- இலங்கை வரலாற்றில் புது 'அனுபவத்தைப்' பெறுகின்றது. 'போர்' என்பதையே கண்டி ராத இலங்கைப்படை புதியவகைப் போருககு முகம் கொடுக்க நேருகின்றது. படையினர் பலாலியில் குவிக்கப்படுகின்றனர். முகாம் மேலும் விஸ்தரிக்கப்படுகின்றது.

## 'அவ்ரோ' தகர்ப்பு

1978-10-07ஆம் திகதி..... இலங்கையின் சிவில் போக்குவரத்து 'அவ்ரோ' ரக விமானம்

திரம் மேற்கொண்டனர். வானத்தில் இருந்து 'கொட்டிய' கொடூர குண்டுகளின் உதவி யால் வடமராட்சியை இராணுவம் அழித்தது. எனினும் அவர்களால் அந்நிலை கொள்ள முடியவில்லை. நெல்லியடித் தாக்குதல் இரா ணுவத்தைத் தடுமாற வைத்தது.

## மீண்டும் விமான நிலைய விஸ்தரிப்பு

விமான நிலையத்தை விஸ்தரிக்க அரசு முயன்றது. 1986 அளவில் விளை நிலங்கள்- குடிநிலங்களில இருந்து மக்கள் பலாத்கார மாக விரட்டப்பட்டனர். சுமார் மூன்று சதுர மைல் பரப்பினை விமான நிலையமும் பலாலி முகாமும் தன்னுள் விழுங்கிக் கொண் டது. சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் தமிழ் மக்களின் உயிரையும் - உடைமைகளை யும் அழிக்கப் பயன்படும் கொடிய யுத்த பூமியாக்கப்பட்டது

அந்நியன் ஆக்கிய விமானத்தளம் இன்று சிங்களப்படையின் புகலிடமாக மாறிவிட் டது. இது நம் மண்ணில் அந்நிய ஆதிக்கச் சின்னமே! ஆம், அது தமிழீழ நெஞ்சில் ஒரு முள்!

★ நன்றி

---

இத்தொடர் கட்டுரையை எழுதுவதற்கு உபயோகமான பல தகவல்களைத் தந்துதவி யோர் ஓய்வு பெற்ற வயாவிளான் கிராமசேவ கர் திரு. யோ. அருளானந்தம். வயாவிளா னைச்சேர்ந்த திரு வல்லிபுரம் நீலப்பிள்ளை, அச்சுவேலியைச்சேர்ந்த அண்ணாவியார்எஸ். ஆர்.மார்க்கண்டு, முன்னாள் பலாலி கிராம சேவகரும் சமாதான நீதிபதியுமான திரு. செ. உலகநாதன் ஆகியோர்.

இவர்களுக்கு எமது நன்றி.

★ இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக

# யாழ் உ. அ. அ. பிரிவு ஜனசக்தி குடும்பங்கள் ஜனசக்தி புள்ளிகளை சேமிப்பிலிட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவில் ஜனசக்தி பெறும் குடும்பங்கள் தங்கள் கைவசம் உள்ள பாவிக்கப் படாத ஜனசக்திப் புள்ளிகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அந்த அந்தக் குடும்பங்கள் தங்கள் சேமிப்புக் கணக்கிலுள்ள தபால் கந்தோர்கள், உபதபாலகங்களுக்கு உடன் சென்று தமது சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடுவதற்கான ஒழுங்குகளை மாகாணத்தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் செய்துள்ளார்.

இதேபோல யாழ் பிரதான வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குள்ள ஜனசக்திக் குடும்பங்களும், 37 பிரப்பங்குளம் வீதியில் தற்காலிகமாக இயங்கும் தேசிய சேமிப்பு வங்கி அலுவலகத்தில் வைப்பிலிடலாமென்றும் அவ் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி பெறுபவர்களின் ஜனசக்தி புள்ளிகள் பயனற்றதாகிவிடும் நிலைமைகள் குறித்து யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சபாபதிப்பிள்ளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனசக்தி பெறும் குடும்பங்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறும், அவ்வாறு பயன்படுத்தத் தவறினால் ஜனசக்தி புள்ளிகள் வீணாகிவிடும் என்றும் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

பாவனைப் பொருட்களுக்கென வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா பெறுமதியான புள்ளிகளில் பயன்படுத்தப்படாத புள்ளிகளும் மாதாந்தம் கட்டாயமாக சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட வேண்டிய 458 ரூபா புள்ளிகளையும் கணக்கிலிடுமாறும் உதவி அரசாங்க அதிபர் திரு. சபாபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த ஜனசக்தி அட்டையிலுள்ள புள்ளிகளைப் பிரித்தெடுப்பது உத்தியோகத்தரது கடமை என்றும், பாவனையாளர்கள் பிரித்தெடுக்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## உலக அரங்கில்

### இரேக்கத்தில் 55 கைதிகள் தப்பியோட்டம் !

இரேக்க நாட்டின் மத்திய சிறைச்சாலையில் இருந்து நேற்று அதிகாலை 55 சிறைக்கைதிகள் தப்பியோடியுள்ளனர் இச்சம்பவம் நடைபெற்றபோது சிறைச்சாலைப் பகுதியில் நானூறு காவலர்கள் கடமையில் இருந்தனர்.

சிறையில் உள்ள ஒன்பது காவலரண்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த கைதிகள் சிறைக் காவலர்களிடம் ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்துவிசாரணை நடாத்துமாறு இரேக்க அரசு பணித்துள்ள அதே சமயம்,நாடுமுழுவதும் தேடுதல் நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

### கொலம்பியாவில் கைக்குண்டு வீச்சு 12 பேர் ஸ்தலத்தில் பலி !

கொலம்பியாவில் கைக்குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்றில் 12 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மெடலின் நகரில் நடைபெற்ற இச்சம்பவத்தில் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு கொலம்பியாவின் போதைப்பொருள் கடத்தல் குழு ஒன்றின் வேலையாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெடலின் நகரமே கொலம்பியாவின் போதைப் பொருள் கடத்தல்காரரின் குகை என அழைக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### காஸாவிலிருந்து பலஸ்தீனியரை வெளியேற்ற முயற்சி

ஆக்கிரமிக்கப்பட்ட காஸா வலயத்தில் இருந்து பலஸ்தீனியர்களை வெளியேற்றும் முயற்சியில் இஸ்ரேலிய ராணுவம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலைப்பகுதியில் சுற்றி வளைப்பில் ஈடுபட்ட இஸ்ரேலிய ராணுவம் 730 பலஸ்தீனியரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் இஸ்ரேலிய ராணுவம் கைது செய்யும் படலத்தில் ஈடுபட்டுள்ளது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து காஸாப்பகுதி பலஸ்தீனியரிடையே பதற்றம் நிலவுகிறது.

1987 இற்கு பின்னர் காஸாவில் இஸ்ரேலிய ராணுவம் பெரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவது இதுவே முதற்தடவை.

### விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்கு ரஷ்யா கவலை தெரிவிக்கிறது

1985 இல் தென்கொரிய பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமைக்கு ரஷ்யா முதற்தடவையாக தனது கவலையைத் தெரிவித்துள்ளது. தனது பாதுகாப்பு நிலைகளின் மேலாக கொரிய போயிங் பயணிகள் விமானம் பறந்ததாகக் கூறி ரஷ்யா மேற்படி விமானத்தை 1985 செம்டம்பர் மாதம் சுட்டு வீழ்த்தியிருந்தது. இச்சம்பவத்தில் 290 பேர் பலியானார்கள்.

ரஷ்யா வந்துள்ள தென்கொரிய வெளிவிவகார அமைச்சரிடமே ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் எட்வெட் செவனாஷே ரஷ்யாவின் கவலையை வெளியிட்டுள்ளார்.

### கோதீவு என்று கூறி

## தென்தமிழீழ மக்களுக்கு கத்தோலிக்க மக்கள் உதவி

கலவரம் காரணமாக நிர்க்கதிக்குள்ளாகி சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் தென்தமிழீழ மக்களுக்கு உடனடியாக உதவும்படி கத்தோலிக்க திருச்சபை பங்கு மக்களைக் கேட்டுள்ளது.

இதற்கு உதவியாக நத்தார் காலங்களில் அதிக பணத்தை உடுப்பு, உணவுக்கு செலவிடாது அவைகளைச்சேமித்து வழங்கும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்போதைய நிலையில் கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துமடல்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதால் அவைகளை வாங்காது அப்பணத்தையும் சேமித்து தென்தமிழீழ மக்களுக்கு உதவும் படியும் திருச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப- 17)

## காப்புறுதிக் கூட்டுத்தாபன வடபிராந்தியக் கிளையை மூடுமாறு மேலிடம் பணிப்பு

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் தீ, களவு, மோட்டார் காப்புறுதி வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதென்றும் இதுபற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திரு. கே. அப்புத்துரை தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தலைமைச் செயலகம் இதனை மூடும்படி தமக்கு அறிவித்துள்ளதாகவும், தாம் பொது மக்களின் நன்மை கருதியே தற்போது செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த வாரம் முதல் ஆயுட் காப்புறுதி, ஆயுள் முதிர்ச்சிக் காப்புறுதிக் கட்டணங்கள் காலை 9 மணி முதல் 10 மணிவரை தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப- 11)

சிங்கள...

னியாவரை அதிக கட்டணம் அறவிட்டதாலேயே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானார்களாம்.

இவ்வாறு அதிக கட்டணம் அறவிட்டவர்களிடமிருந்து மிகுதிப் பணம் திருப்பி வழங்குமாறும் இராணுவம் உத்தரவிட்டது. (70)

வேலணையில...

பெரியாஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு மரணமானார்கள்.

புருஷோத்தமன் (10) க, இராசையா (18), இ. துரைராசா (43), இ. ராஜ்தமார் (30) ஆகியோர் படுகாய

## ஆசிரியர்களின் சம்பளம் கட்டு நிதி வந்து சேரவில்லை

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதச் சம்பளத்துக்கான கட்டு நிதி இன்னும் கல்வித் திணைக்களத்திற்குவந்துசேரவில்லை.

நவம்பர் மாதத்திற்கான கட்டுநிதிகொழும்பில் வைத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் கையளிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி இன்னமும் யாழ்ப்பாணம் திரும்பாததால் ஆசிரியர்களுக்கான நவம்பர் மாதத்திற்கான சம்பளம் வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

இதேவேளை டிசம்பர் மாதத்திற்கான சம்பளமும் வழங்கவேண்டிய காலமும் வந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (70,ப 11 32)

## விட்டாமில்க் குடித்ததால் நோயாளருக்கு வயிற்றோட்டம்

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த பசுப்பாலிற்கு பதிலாக தற்போது விட்டாமில்க் கரைத்துக் கொடுக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கு பாவிப்பதற்காக குறைந்தளவு கொழுப்புச் சத்துக்கொண்ட இந்த பால்பவுடரில் ஒருவித மணம் காணப்படுவதால் நோயாளிகள் இதனைக் குடித்துக் கொள்ள முடியாது வெளியே வீசுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தப்பாலைக்குடித்த சில நோயாளருக்குவயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது (71)

## திருச்சியில் உள்ள தமிழ் அகதிகள் யாழ்ப்பாணம் திரும்ப விருப்பம்

கடந்த காலங்களில் இலங்கையின் வடபகுதியிலிருந்து அகதிகளாக தமிழகத்துக்குச் சென்று, திருச்சி கல்யாண

போன்றவை திருப்திகரமானதாக இல்லையென அங்கிருந்து வரும்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கேரதீவு என்று கூறி

# யாழ்ப்பாணப் பயணிகளை இடையில் இறக்கப்படுகின்றனர்

பயணிகளை வவுனியாப் பகுதியில் இருந்து அழைத்து வரும் சில மினிபஸ்கள் கேரதீவு, கொம்படி என்று சொல்லி பயணிகளை இடம் தெரியாத இடங்களில் இறக்கி விடுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பிலிருந்து வந்த பல பயணிகள் இடம் தெரியாமல் இவ்வாறு அலைந்து அவ்வூர் மக்களால் உபசரிக்கப்பட்டனர்.

இடைநடுவில் விடப்பட்ட பலர் அவ்வூர் மக்களுக்கு பணம் செலுத்தியே குறிப்பிட்ட இடங்களுக்கு வந்து சேருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் நடுக்காட்டில் வைத்து இவ்வாறு வந்த லொறி ஒன்று திடீரென நிறுத்தப்பட்டு பழுதடைந்து விட்டது என பயணிகளுக்கு தெரிவிக்கப்பட்டதால் அவர்கள் அவலக்குரல் எழுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

### "ஷெல்"...

விளையாடிக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுவன் செ. சிவகணேஸ் ஆகியோர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல்களினால் இவர்களின் வீடுகளும் சேதமடைந்தன. (32, ப- 24)

### தோப்பூரில்...

வத்தில் உப்பூறல் கிராமத்தைச் சேர்ந்த க. விஜயசிங்கம் (40) தம்பிராசா (24) ஆகியோரே மேற்படி இராணுவத்தினல் கொலை செய்யப்பட்டவர்கள். (71)

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 17-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

மிகுதிப் பணம் திருப்பி வழங்குமாறும் இராணுவம் உத்தரவிட்டது. (70)

### 8 பொதுமக்கள்...

பில் கைது செய்யப்பட்டு முகாமில் ஒப்படைக்கப்பட்ட கந்தசாமி ஜெயபாக்கியன் (16), கிருஷ்ணபிள்ளை அசோகன் (28) (இரு பிள்ளைகளின் தந்தை), சின்னத்தம்பி (13), தம்பிமுத்து ராசா (52), முத்துக்குமார் கிருஷ்ணபிள்ளை (25) ஆகியோருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இதேவேளை திருமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள 13ம் கட்டையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்த ரெலோ இயக்கத்தினர் அவர்களை ஜி பி. எஸ். இராணுவ முகாமில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த வியாழன் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டோர் விபரம், கா. பெரியதம்பி, கா. குணம், கா. சின்னத்தம்பி முகாமில் இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. (71)

இராசையா (18), இ. துரைராசா (43), இ. ராஜ்குமார் (30) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இக் குண்டு வீச்சினால் பல வீடுகளும். கூட்டுறவுக் கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களும் பலத்த சேதமடைந்தன. (ப-11 19,71)

### காங்கேசன்துறையில்..

மாதாந்தம் யாழ் மாவட்டத்துக்குத் தேவையான 16 ஆயிரம் மெற்றிக் தொன் உலர் உணவில் 5000 மெ. தொன்னே பருத்தித்துறையில் இறக்கப்படுகிறது. நாளொன்றிற்கு பருத்தித்துறையில் இறக்கக் கூடிய 300 தொன் உணவோடு ஒப்பிடுகையில் காங்கேசன்துறையில் இறக்கக்கூடிய 1800 தொன் குடாநாட்டு உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

### வங்கி ..

வங்கி முகாமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகம் அறிவித்துள்ளது. (71)

வடபகுதியிலிருந்து அகதிகளாக தமிழகத்துக்குச் சென்று, திருச்சி கல்யாண மண்டபத்தில் தங்கி உள்ள 5000 குடும்பங்களும் எதுவித வசதிகளுமின்றி அவதிப்படுகின்றனர்.

போதியளவு குடிநீர், சுகாதாரம், மற்றும் உணவுவசதி மானதாக இல்லையென அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு அகதிகளாக வாழ்பவர்கள் மீண்டும் யாழ் வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவென வும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

# அராலித்துறையூடாக வீதியமைக்கப்படவுள்ளது

தீவுப்பகுதியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்க அராலித்துறை கடற்பகுதியூடாக வீதி அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ் செயலகம் தற்காலிகமாக இவ்வீதியை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இவ்வேலையை உடனடியாக ஆரம்பிக்க அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (66,33

### ஊர்காவற்றுறை...

கார்த்திகா என்ற 12 வயதுச் சிறுமி ஸ்தலத்தில் உடல் சிதறிப் பலியானார்.

இச் சிறுமியின் தந்தையான பொ. இராசையா (40), வெ. லட்சுமி (70) ஆகியோர் படு காயமடைந்தனர்.

இந்த ஷெல்கள் சரவணை, கரம்பன், நாரந்தனை ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்ததாலும் பல வீடுகள் சேதமடைந்தன. (19)

### வடமராட்சி...

கலந்துரையாடுவதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் தவறாது நாளை பி.ப. 2 மணிக்கு வட இந்துமகளிர்கல்லூரிக்கு சமூகம் தரும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.